தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்.25154 / அ1 / இ2 / 2021 நாள்.10.02.2022

பொருள்: பள்ளிக் கல்வி – 2021–22ம் ஆண்டு ஆசிரியர்கள் பொதுமாறுதல் சார்பான விண்ணப்பங்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்தமை – திருத்திய கலந்தாய்வு அட்டவணை வெளியிடுதல் சார்பு.

பார்வை: 1)அரசாணை (நிலை)எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021

2) பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் இதே எண்ணிட்ட நாள்.30.12.2021, 06.1.2022, 07.1.2022 8.1.2022, 10.1.2022, 20.1.2022, 21.1.2022, 22.1.2022 மற்றும் 24.1.2022, 28.1.2022 மற்றும் 7.2.2022.

3) சென்னை உயர்நீதி மன்றம் ரிட் மனு எண்.1334/2022, 1286/2022 மற்றும் தொகுப்பு வழக்குகள்மீது அளித்த 08.02.2022 நாளிட்ட இடைக்கால தீர்ப்பாணை.

4) சென்னை உயர்நீதி மன்றம் ரிட் மனு எண்.1963/2022, மீது அளித்த 09.02.2022 நாளிட்ட இடைக்கால தீர்ப்பாணை.

–0–

பார்வை–1ல் காணும் அரசாணையில் 2021–22ம் கல்வியாண்டிற்கான ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல்கள் மற்றும் பதவி உயர்வுகள் சார்பாக நெறிமுறைகள் ஆணை வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பார்வை–2ல் காணும் செயல்முறைகளின் வாயிலாக பொதுமாறுதல்கள் / பதவி உயர்வுகளுக்கான கால அட்டவணைகள் வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக பார்வை–2ல் காணும் 28.1.2022 நாளிட்ட செயல்முறைகளில் 2021–22ம் கல்வியாண்டிற்கான ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்கான திருத்திய கால அட்டவணை வெளியிடப்பட்டது.

பார்வை –3 மற்றும் பார்வை–4ல் காணும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாணையில் மேற்காண் வழக்கு மனுதாரர்களை 11.02.2022 அன்று நடைபெறவுள்ள மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு இடைக்கால தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் தீர்ப்பாணைகிணங்க, மாறுதல் கலந்தாய்விற்கான முன்னுரிமைப் பட்டியல் திருத்தம் செய்ய வேண்டியுள்ள நிலையில் பார்வை–2ல் காணும் காலஅட்டவணைப்படி 11.2.2022 மற்றும் 12.2.2022 ஆகிய இரு நாட்களில் அரசு/ நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர் / கணினி ஆசிரியர் நிலை–1/உடற்கல்வி இயக்குநர் நிலை–1/தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) வருவாய் மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் நடைபெறவுள்ள மாறுதல் கலந்தாய்வு ஒத்திவைக்கப்படுகிறது. மேலும் இப்பதவிக்களுக்கான மாறுதல் கலந்தாய்வு தேதி பின்னர் அறிவிக்கப்படும்

மேலும் அதனையடுத்து 14.2.2022 முதல் திட்டமிட்ட கால அட்டவணைப்படி ஏனைய கலந்தாய்வுகள் நடைபெறும் எனவும், இது சார்ந்த தகவலை தங்கள் ஆளுகைக்குட்பட்ட மேற்படி ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

பள்ளிக்கல்வி ஆணையருக்காக.

10/2/22

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலமாக)

நகல்:

1. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
2. இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி)
3. இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)
4. இணை இயக்குநர் (தொழிற் கல்வி)
5. சம்பந்தப்பட்ட பிரிவுகள்
6. EMIS ஒருங்கிணைப்பாளர், மாநில திட்ட இயக்ககம், சென்னை–6